இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

யோவான் தம் சீடர் இருவருடன் நின்றுகொண்டிருந்தார். இயேசு அப்பக்கம் நடந்து சென்று கொண்டிருந்தார். யோவான் அவரைக் கூர்ந்து பார்த்து, "இதோ! கடவுளின் செம்மறி" என்றார். அந்தச் சீடர் இருவரும் அவர் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின்தொடர்ந்தனர். இயேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின்தொடர்வதைக் கண்டு, "என்ன தேடுகிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள், "ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "வந்து பாருங்கள்" என்றார். அவர்களும் சென்று அவர் தங்கியிருந்த இடத்தைப் பார்த்தார்கள். அப்போது ஏறக்குறைய மாலை நான்கு மணி. அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள். (யோவான் 1: 35-39)

# 'இறைவார்த்தையின் ஞாயிறு' விவிலியக் கல்விக்கும் மறைபரப்புக்கும் அர்ப்பணிக்கப்பட வேண்டும்



1965-ஆம் ஆண்டு, இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட 'இறைவெளிப்பாடு' எனும் கொள்கை திரட்டு இறைவார்த்தையை மீண்டும் ஆய்ந்தறிவதற்கான உத்வேகத்தை அளித்தது.

கடவுளின் வார்த்தையை மீண்டும் ஆய்ந்தறிவதற்கு வழிவகுத்த இந்த உத்வேகமும், ஆன்மீகப் புதுப்பித்தலுக்கு ஊற்றாக விளங்கும் மறைநூலின் மீது ஏற்பட்ட விழிப்புணர்வும், கடந்த சில பத்தாண்டுகளாக திருவிவிலியத்தின் மீது கத்தோலிக்கர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை நாடுகளை உள்ளடக்கிய வட்டாரத்தில் உள்ள கத்தோலிக்கர்கள் ஏறக்குறைய 20 ஆண்டுகளாக, ஆண்டுதோறும் ஜூலை மாதத்தில் விவிலிய ஞாயிறைக் கொண்டாடி வருகின்றனர் - மேற்கண்ட நாடுகளைப் பிரதிநிதிக்கும் வட்டார ஆயர்கள் பேரவையானது, இந்த விவிலிய ஞாயிறு கொண்டாட்டத்திற்கான ஊக்குவிப்பைக் கவனிக்கும் பொறுப்பை வட்டார விவிலிய ஆணையத்திடம் ஒப்படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

20 ஆண்டுகளுக்கும் மேலாக, ஒவ்வொரு ஆண்டும் விவிலிய ஞாயிறுக்கான வருடாந்திர செய்தியைத் தயாரிப்பதோடு, விவிலியம் சார்ந்த டிப்ளோமா கல்வியும் பாடத்திட்டமும் உருவாக்கப்பட்டு, கத்தோலிக்கர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் விவிலியத்தை அன்பு செய்யவும் வாழவும் மறைமாவட்டங்கள், பங்குகள் ஆகிய நிலைகளில் திருவிவிலியக் கல்வியை ஊக்குவித்தது. இருப்பினும், நாம் எல்லா முயற்சிகளும் எடுத்தப்போதிலும், **"பெரும்பான்மையான கத்தோலிக்கர்கள் மறைநூலை அறிந்திருக்கவில்லை"** என்பதை மறுப்பதற்கில்லை.

பலர் திருப்பலியில் கலந்து கொள்ளும் போதுதான் கடவுளுடைய வார்த்தையைக் கேட்கிறார்கள் " (Aperuit Illis, எண் 5) ஆயினும், இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தை நாம் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை என்றாலும், அனைத்து கத்தோலிக்கர்களையும் கடவுளுடைய வார்த்தையுடன் புதுப்பிக்கப்பட்ட உறவுக்கு அழைக்கும் பணியைத் தொடர வேண்டும். இது திருவிவிலியத்தை வெறும் புத்தகமாக மட்டுமல்லாமல், நமது அன்றாட வாழ்க்கையில் உயிருடன் செயலாற்றும் கடவுளுடைய வார்த்தையாக ஏற்க வேண்டும். ஒவ்வொரு கத்தோலிக்கரும் கடவுளுக்கும் அவருடைய வார்த்தைக்குமான பாராட்டு, அன்பு மற்றும் உண்மையுள்ள சாட்சியத்தை ஆழப்படுத்த நாம் உதவ வேண்டும்.

ஆகவே, உலகெங்கிலும் உள்ள பல கத்தோலிக்க மறைமாவட்டங்கள் மற்றும் மாமறைமாவட்டங்கள் ஆகியவற்றின் முயற்சிகளுடன், நமது உள்ளூர் ஈடுபாடும் இப்போது இந்த 'இறைவார்த்தையின் ஞாயிறு' தோற்றுவித்தலால், உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது. இது கடந்த செப்டம்பர் 30, 2019 திகதி, புனித எரோணிமுஸ் விழா அன்று வெளியிடப்பட்ட Aperuit illis", எனும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூதுரை மடலின் வெளிப்பாடாகும்.

இறைவார்த்தையின் ஞாயிறு' கொண்டாட்டமானது விவிலியக் கல்வி மற்றும் மறைபரப்பு ஆகியவற்றிற்கென அர்ப்பணிக்கப்பட வேண்டும்" என்று திருத்தந்தை அறிவித்துள்ளார் ("Aperuit illis", எண் 3).
இதனிமித்தம், ஜூலை மாதத்தில் கொண்டாடப்பட்டு வந்த நமது உள்ளூர் திருவிவிலிய ஞாயிறு கொண்டாட்டத்தை நாம் எதிர்வரும் 2021 முதல், ஆண்டின் பொது காலத்தின் மூன்றாவது ஞாயிறு அன்று (ஜனவரியில்) கொண்டாட கடந்த ஜனவரி 2020-ல் கூடிய 105-வது ஆயர் பேரவை முடிவு செய்துள்ளது.

இந்த ஆண்டு 2021, ஜனவரியில் 'இறைவார்த்தையின் ஞாயிறு' கொண்டாடப்படுவது சவாலுக்குரியதாகும். ஏனெனில் அது பள்ளிகளும், விவிலிய ஞாயிறு கொண்டாட்டத்திற்கு அதிகளவில் பங்களிக்கும் மறைக்கல்வி வகுப்புகளும் புதிதாகத் தொடங்கப்பட்ட காலமாகும். இந்த திகதி மாற்றம் தொடக்கத்தில் பெரும் சாவாலாக அமையும் என்பது உண்மை. இந்த வகையில், இறைவார்த்தையின் ஞாயிறு கொண்டாட்டமானது ஒருநாள் கொண்டாட்டமாக அமையாமல், ஆண்டு முழுவதுக்குமான திட்டமிடப்பட்ட பல்வேறு மறை நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.




எல்லாவற்றிற்கும் மேலாக, கடவுளின் வார்த்தை அனுதினமும் வாசிக்கப்பட்டு வாழப்பட வேண்டும். நம்முடைய அன்றாட வாழ்வில் கடவுளுடைய வார்த்தை கொண்டிருக்கும் பெரும் மதிப்பை நாம் பாராட்ட வேண்டும். இறைவார்த்தையால் ஊட்டமும், உருவாக்கமும் பெற்றால்தான் உலகெங்கும் நற்செய்தியை அறிவிப்பதற்கான நமது பணியை நிறைவேற்ற இயலும். (மத்தேயு 28: 18-20, திப 1: 8)

கடந்த காலங்களில் இவை நமது விவிலிய ஊக்குவிப்புத் திட்டங்களில் மேன்மையான பகுதியாக இருந்தபோதிலும், 'இறைவார்த் தையின் ஞாயிறைக் கொண்டாட திருத்தந்தை பிரான்சிஸ் பின்வரும் திட்டங்களை முன்மொழிந்துள்ளார்.

**I. திருவிவிலிய அரங்கேற்றம் செய்தல்.**
**2 இறைவார்த்தை அறிக்கையிடுதலை முன்னிலைப்படுத்துதல்.**
**3. மறையுரையில் இறைவார்த்தைக்கான மாண்பை வலியுறுத்துதல்.**
**4. திருப்பலியில் இறைவார்த்தை அறிக்கையிடுவோருக்கான நியமன சடங்கை நிறைவேற்றுதல்.**
**5. வாசகர்களுக்குப் பயிற்சியளித்தல்**
**6.அனைவருக்கும் விவிலியம் அல்லது விவிலியம் சார்ந்தப் புத்தகங்களை வழங்குதல்.**
**7.ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையை வாசித்து அதில் இறைவேண்டல் செய்ய ஊக்குவித்தல்.**

நமது வட்டாரத்தில் விவிலிய அறிவு அதிகரிப்பதற்கும் கடவுளுடைய வார்த்தையை அன்பு செய்யவும் அர்ப்பணிப்புடன் பங்காற்றிய அனைத்து வயதினருமான பொதுநிலையினருக்கும், துறவற அருள்சகோதர-சகோதரிகளுக்கும், அருள்பணியாளர்களுக்கும் மேற்கண்ட விவிலிய ஆணையம் நன்றிகூற கடமைப் பட்டுள்ளது.

உங்கள் ஒத்துழைப்பும் தன்னலமற்ற பங்களிப்பும் இல்லாவிட்டால், நமது விவிலிய அறிவு வளர்ச்சியடைய சாத்தியமில்லை. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நோக்கம் இன்னும் மேன்மையடைய நாம் மறுவுறுதி எடுப்போம். "இறைவார்த்தையின் ஞாயிறு இறைமக்கள் மறைநூலின் துணைகொண்டு சமய மற்றும் நெருங்கிய உறவிலும் வளர உதவுவதாக". (Aperuit Illis, எண் 15).

# திருப்பலி சடங்குகளில் பெண்களுக்கு புதிய அங்கீகாரம்

**வத்திக்கான்** : திருப்பலி வாசகங்களை வாசிப்பதற்கும், திருப்பலிகளில் அருள் பணியாளர்களுக்கு உதவுதற்கும், பெண் களுக்கு கூடுதல் உரிமைகளை வழங்க வழிசெய்யும், Motu Proprio எனும் சுயவிருப்பத்தின் பேரிலான அறிக்கை ஒன்றை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்,

திருப்பலியில் உதவுபவர்களாகவும், திருப் பலியின்போது திருப்பலி வாசகங்களை வாசிப்பவர்களாகவும் ஆண்களை மட்டுமே அனுமதித்து, திருத்தந்தை, புனித 6-ஆம் பவுல் அவர்கள், 1972-ஆம் ஆண்டு கொணர்ந்த விதிகள், தற்போதைய Motu Proprio வழியாக நீக்கம் பெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



*திருத்தந்தை நிறைவேற்றும் திருப்பலியில் பீடப் பணியாளராக உதவி செய்யும் பெண்*

சனவரி 11, கடந்தத் திங்களன்று வெளியிட்டுள்ளார்.உலகின் பல்வேறு தலத்திருஅவைகளில், ஏற்கனவே, திருப்பலிச் சடங்குகளில், நடைமுறையில் இருக்கும், பெண்களின் பங்கேற்பை, தற்போது, அதிகாரப்பூர்வமாக அங்கீ கரிக்கும் இந்த Motu Proprio அறிக்கைக்கு, "Spiritus Domini," அதாவது, ஆண்டவரின் ஆவி, என்று பெயரிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் திருமுழுக்கு விழாவாகிய ஜனவரி 10, கடந்த ஞாயிறன்று திருத்தந்தையால் கையெழுத்திடப்பட்டு, வெளியிடப்பட்ட அவ்வறிக்கை குறித்து விளக்கமளித்து, திருஅவையின் விசுவாசக் கோட்பாட்டு பேராய தலைவர், கர்தினால் Luis Ladaria அவர்களுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அண்மைக்கால ஆயர் மாமன்றங்களின் பரிந்துரைகளை மனதில்கொண்டு, திருப்பலி மேடைகளில் வாசகங்களை வாசிக்கவும், பீடப்பணியாளர்களாக உதவவும், பெண்களுக்கு அதிகாரப்பூர் வமான அனுமதி வழங்க தான் தீர்மானித் ததாக, திருத்தந்தை, இம்மடலில் கூறியுள்ளார்.

பெண்களை அருள்பணியாளராக திரு நிலைப்படுத்தும் எண்ணம் திருஅவைக்கு இல்லை என்று, திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்கள் கூறிய வார்த்தைகளையும் மேற்கோள் காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருப்பலிகளில் உதவிபுரிய, பொதுநிலையினரான ஆண்களையும், பெண் களையும் அனுமதிப்பது, திருஅவையின் மறைப்பணியிலும், வாழ் விலும், அனைவரும் பங்குபெற வழிவகுக்கும் என, கர்தினால் இலதாரியா அவர்களுக்கு எழுதிய மடலில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# "மோதல்களை விடுத்து, ஒன்றிணைப்பை நோக்கிய பயணம்" தொடர்கிறது

**வத்திக்கான்**: கத்தோலிக்கரும், லூத்தரன் சபையினரும், மோதல்களை விடுத்து, ஒன்றிணைதல் என்ற இலக்கை நோக்கி, செல்லும் முயற்சிகளை மேற்கொள்வதாக, இவ்விரு அமைப்பின் பிரதிநிதிகள் அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பீட அவையின் பிரதிநிதிகளும், லூத்தரன் உலக அவையின் பிரதிநிதிகளும் இணைந்து, சனவரி 3, ஞாயிறன்று வெளியிட்ட ஓர் அறிக்கையில், ஒற்றுமையை நோக்கி மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கூறப் பட்டுள்ளன.

கத்தோலிக்கத் திருஅவையிலிருந்து, மார்ட்டின் லூத்தர் அவர்கள் விலக்கிவைக் கப்பட்ட ஜனவரி 3-ஆம் தேதி, இவ்வாண்டு 500-ஆம் ஆண்டு நிறைவை அடைந்துள்ள வேளையில், அவரை விலக்கிவைக்க காரணமாக இருந்த கொள்கைகளில் கத்தோலிக்கரும், லூத்தரன் சபையினரும், மாற்றங்களை உருவாக்க கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் முயற்சிகள், இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பீட அவையின் செயலர், ஆயர் Brian Farrell அவர்கள், இந்த அறிக்கை குறித்து, வத்திக்கான் செய்திக்குப் பேட்டியளித்த வேளையில், 1999-ஆம் ஆண்டு முதல், கத்தோலிக்கரும் லூத்தரன் சபையினரும் தங்களுக்கிடையே இருந்து வந்த வேறுபாடுகளைக்களையும் முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று கூறினார்.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக, கத்தோலிக்கரும் லூத்தரன் சபையினரும் மேற்கொண்டு வரும் ஒருங்கிணைப்பு முயற்சியின் ஒரு வெளிப்பாடாக சனவரி 3, **"மோதல்களை விடுத்து, ஒன்றிணைப்பை நோக்கி"** என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த புதிய அறிக்கை, இரு தரப்பினருக்கும் புதிய உத்வேகத்தை அளித்துள்ளது என்று, ஆயர் Farrell அவர்கள், தன் பேட்டியில் குறிப்பிட்டார்.




# இயேசுவில் நமது அனுபவத்தைப் பிறருடன் பகிர்வோம்

இன்றைய பொதுக்கால 2- ஆம் ஞாயிறு வாசகங்கள் இறைவன் நம்மை எப்போதும் இறைவன் தேடிக் கொண்டே இருக்கிறார் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றன. முதல் வாசகத்தில் ஆண்டவர் சாமுவேலை நான்கு முறை தேடி வந்து அழைக்கிறார். குரு ஏலியின் தூண்டுதலோடு "பேசும் உம் அடியேன் கேட்கிறேன்" என பதிலளிக் கிறார் சாமுவேல். இறைவனின் அழைப்பை ஏற்றார், இறைவாக்கினராகச் செயல் பட்டார்.

இன்றைய இரண்டாம் வாசகம், 'நம் உடல், கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவியார் தங்கும் கோவில்' என்று முத்திரைப் பதிக்கிறது. எனவே நாம் நமது உடலுக்கு உரியவர் அல்ல என்பதை நினைவூட்டப்படுகிறோம்.

நற்செய்தி இறையழைத்தலின் மகிமையை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. திருமுழுக்கு யோவான் 'இதோ கடவுளின் ஆட்டிக்குட்டி' என்று தம் சீடர்களுக்கு அடையாளம் காட்டுகின்றார். அவரின் சீடர்களும் இயேசுவைப் பின் தொடர்ந்தனர். மெசியாவைக் கண்டுக் கொண்டேன் என்ற செய்தியைத் தமது சகோதரர் சீமோனிடம் தாமதமின்றி தெரிவிக்கிறார் அந்திரேயா. ஆனால் நீங்கள் நான் யார் எனச் சொல்கிறீர்கள்" என இயேசு கேட்ட போது பேதுரு அளித்த பதிலும் இந்த விசுவாசத்தில்தான். இதுவே சீடத்துவத்திற்கான நிபந்தனை.

இயேசு சீமோனை உற்றுப் பார்த்தவுடன் அங்கு ஒரு மாற்றம் ஏற்படுகின்றது, அவர் கேபாவாக பேதுரு மாறுகிறார். "பாறை" திருஅவையின் தலைமை என்ற ஒரு மாறுதலை ஏற்படுத்துகின்றது. இறைவனால் தொடப்பட்டவராக இறையனுபவம் பெற்றவராகிறார். "இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்" (ஏசா 6:8) என்பதற்கு இது ஒப்பாகிறது. இன்று நம்மையும் ஆண்டவர், "வந்து பாருங்கள்" என்று அழைகிறார். அவரோடு தங்கி இறையனுபவத்தைப் பெறுவோம். எனவே இப்புத்தாண்டில் நம்மை அழைக்கும் இயேசுவைப் பின் செல்வோம், அவரோடு தங்கி இருப்போம், இறையனுபவம் பெறுவோம். மேலும், எப்படி விண்மீன் இடையர்களையும், மூன்று ஞானிகளையும் ஆண்டவர் இயேசுவிடம் அழைத்து வந்ததோ, அந்திரேயா எப்படி பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தாரோ அது போல நாமும் மற்றவர்களை இயேசுவிடம் அழைத்து வருவோம். அப்போதுதான் சீடத்துவ வாழ்வானது முழுமை பெறும்.

*-சவரிநாதன், சுங்கைபட்டாணி.*

**பொதுக்காலத்தின் 2-ஆம் ஞாயிறு**
1 சாமு 3: 3b-10, 19
திபா 40: 2,3. 6-7ம. 7b-8. 9
1 கொரி 6: 13உ-15ய,17-20
யோவான் 1: 35-42
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 2**

# நேர்காணல் ஒத்திவைப்பு

**இவ்வாரம் வெளிவரவிருந்த திருத்தொண்டர் அருள்திரு பொனவெஞ்சர் இராயப்பன் அவர்களுடான நேர்க்காணல் MCO காரணமாக மற்றொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**நினைவில் கொள்வோம்**

**24-01-2021**
**இறைவார்த்தை ஞாயிறு**
**31-01-2021**